**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 124/2021.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தமிழ்ச்செல்வன். | ஜாதி | |
| தந்தை பெயர் | கயிலங்கிரி. | தொழில் | வழக்கறிஞர். |
| கிராமம் | கோட்டுர். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 57/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, கோட்டுரில் குடியிருந்துகொண்டு, வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். கடந்த 03.02.2024 ஆம் தேதியன்று என் மனைவி பொன்மாரியை, அவர் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தபோது, என் வீட்டிற்கு முன்பாக எதிரி ஜெகதீஸ்பாண்டியனின் தம்பி ஜெகவீரபாண்டியன் என்பவர் "எத்தி, அடித்து கீழே தள்ளிவிட்டார்". அப்போது என் மகள் சுமித்தியா அருகிலிருந்தார். என் மகன் யுகபாரதி மற்றும் எனது மருமகன் வசந்த் ஆகியோர்களையும், மண்வெட்டியைக் கொண்டு வெட்ட முயற்சிசெய்து மிரட்டியுள்ளான். அவர்கள் இருவரும், அவருக்குப் பயந்து ஓடிவிட்டார்கள். பக்கத்து வீட்டைச் சேர்ந்த கோபால் மகன் கேசாரி என்பவர், ஜெகவீரபாண்டியனை தடுத்து விலக்கிவிட்டார். நான் அன்றைய தினம் நீதிமன்றத்தில் இருந்தேன். எனது மகள் சுமித்தியா என்பவர், எனக்கு போன் செய்து சம்பவம் குறித்து கூறினார். நான் உடனே ஊருக்குச் சென்று, எனது மனைவியை அழைத்து வீரபாண்டி காவல் நிலையத்திற்கு புகார் செய்யஅழைத்துச் சென்றேன். அப்போது, போலீசார் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பிவைத்தார்கள். அப்போது, வீரபாண்டி அரசு

மருத்துவமனையில் விசாரிக்க வந்த போலீசாரிடம் புகார் கொடுத்துவிட்டு, நாங்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டோம். எங்கள் வீட்டின் முன்பு TN 60 BZ 2986 என்ற பதிவெண் கொண்ட யமஹா என்ற இருசக்கர வாகனத்தை ஜெகவீரபாண்டியன் அடித்து நொறுக்கி கீழே போட்டுவிட்டார். அதன்பின்பு, எனது மகன் மற்றும் அவரது நண்பர்கள் உடன் சென்று, ஜெகவீரபாண்டியன் வீட்டில் வைத்து ஜெகவீரபாண்டியனிடம் "ஏன் வண்டியை அடித்து நொறுக்கினாய் என்று கேட்டபோது, அங்கு ஜெகவீரபாண்டியன் அவரின் இரண்டு கைகளில் 2 கத்திகளை வைத்துக்கொண்டு, நீ இங்க வருவாய் என்று தெரியும் என்று கூறிக்கொண்டே, எனது மகன் நெஞ்சில் கத்தியை வைத்துக் குத்தினார். எனது மகன் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ந்தார். நான் மற்றும் எனது குடும்பத்தினர் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தோம். கடந்த 04.02.2024 ஆம் தேதியன்று அதிகாலை சுமார் 05.00 மணியளவில் சத்தத்துடன் வெளிச்சம் வரவும், நான், எனது மகன், என் மகள் சுமித்யா, மற்றொரு மகள் மாதவிகா மற்றும் என் மருமகன் வசந்த் ஆகியோர்கள் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தபோது, ஜெகதீஸ்பாண்டியன் என்பவர் கையில் வைத்திருந்த கேனில் இருந்த பெட்ரோலை மேற்படி யமஹா இருசக்கர வாகனத்தில் ஊற்றி தீ வைத்தார். எங்களைப் பார்த்ததும், எங்கள் வீட்டிற்கு முன்பிருந்த தென்வடல் பாதை வழியாக தெற்குப் பக்கம் சென்றுவிட்டார். மேற்படி எனது 2 மகள்கள் தீயினை அணைக்க முயற்சி செய்தார்கள், ஆனால் முடியவில்லை. அதற்குள் மேற்படி இருச்ககர வாகனம் எரிந்துவிட்டது. நான் காலை சுமார் 07.30 மணியளவில் வீரபாண்டி காவல் நிலையத்திற்குச் சென்று, புகார் மனு எழுதிக் கொடுத்தேன். தற்போது, என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனு நான் எழுதிக் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்தப் புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம்தான் மேற்படி எங்கள் வீட்டின் முன்பாக நிறுத்திவைத்தருந்போது, எதிரி, நெருப்பிட்டு எரித்த இருசக்கர வாகனம் ஆகும். அந்தப் புகைப்படங்கள் (2 எண்ணிக்கை

கொண்டது) அ.சா.பொ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.30 19:06:02 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**